# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>
# <u>O.S. No.227/ 2010</u>

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.எம்.சீனிவாசன் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **G.அருள்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | **குருநாதன்** | **கிராமம்** | : | |
| **வயது** | : | **45** | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 12.00** | | : | |

**<u>பி.சா.1 – 3 முதல் 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள 8 அயிட்ட சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து வேறு இரு வழக்குகள் அசல் வழக்குஎண் .303/2012 மற்றும் அசல் வழக்கு எண் .317/2012 ஆகியவை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான் . மற்ற இரு வழக்குகளிலும் அயிட்டம் 6 முதல் 8 வரையான தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்துக்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கில் 3 முதல் 6 பிரதிவாதிகள் ஒரு தரப்பினர்களாக சேர்ந்து பதிலுரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த பதிலுரையை நான் படித்து பார்த்திருக்கிறேன் . இந்த வழக்கில் 3 முதல் 6 பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் எனது தாவா சொத்தில் எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் இல்லை என்று தெரிவித்துள்ள நிலையில் நான் பிராதினை திருத்தம் செய்து விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதியாக மணி என்பவரை நான் மனு தாக்கல் செய்து சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். மணி வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார் என்றால் சரிதான் . அவரது வாரிசுகளாக 7 முதல் 9 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 7 முதல் 9 பிரதிவதிகள் பதிலுரை ஏதும் த ாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் எக்ஸ்பார்ட்டி ஆகியிருக்கிறார்கள் என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதி மணி என்பவருக்கு 12ல் ஒரு பங்கு உள்ளதாக ஏற்கனவே அசல் வழக்கு எண்.416/2009 மற்றும் அசல் வழக்கு எண்.418/2009 –ல் தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு

அது பற்றி தெரியாது. மேற்கண்ட வழக்குகளில் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் 12ல் ஒரு பங்கு என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்குதெரியாது . வா.சா.ஆ.1 சிவகொழுந்து என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 ஆன பட்டா பாஸ்புத்தகத்தை தவிர சிவகொழுந்து என்பவர் பெயரில் தனியாக பட்டா ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் கண்டுள்ள பட்டாவின் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆன பொது அதிகார பத்திரம் சிவகொழுந்து செட்டியார் வகையறாவால் எனது தந்தை குருநாதனுக்கு பவர் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . வா.சா.ஆ.2–ல் பட்டா எண் 1 ஐ பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தில் தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள அயிட்டம் 6 முதல் 8 வரை –யிலான சொத்துக்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . வா.சா.ஆ.2–ன் அடிப்படையில் தான் வா .சா.ஆ–3 ஆன என் பெயருக்கான கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . எனக்கு என் தந்தை எழுதிக்கொடுத்த வா.சா.ஆ–3 ஆன கிரய ஆவணத்தில் பட்டா எண்.1 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.120/1, 120/4, 134, ஆகியவை சிவகொழுந்திற்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ–1 ஆன பட்டா புத்தகத்தை தவிர வேறு ஏதேனும் ஆவணம் என்னிடம் உள் ளதா என்றால் இல்லை . பட்டா பாஸ் புத்தகத்தில் சிவகொழுந்து பெயரில் பட்டா எண் 1ஐ தவிர வேறு ஏதேனும் பட்டா எண் இருந்தால் முதல் பக்கத்திலேயே மற்ற பட்டா எண்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் பட்டா பாஸ்புக்கின் கடைசி பக்கத்தில் தாவா சொத்து குறித்த பட்டா எண்களை நானாக வருவாய்அலுவலர்களின் உதவியுடன் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல . பட்டா எண்.18, 35, 41 ஆகியவை எனக்கோ, பன்னீர்செல்வத்தின் தந்தை பொன்னுரங்கத்திற்கோ உரியானது அல்ல என்றாலும் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையானது என்றால் சரியல்ல . நீதிமன்ற தீர்ப்பின் படியும், கிரய ஆவணங்களின் படியும் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையானது என்றால் சரியல்ல . என்னுடைய அனுபவத்தில் தான் அந்த சொத்துக்கள் உள்ளன . எனக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ அவரது தந்தை பொன்னுரங்கத்திற்கோ தாவாசொத்து விவரத்தில் கண்டுள்ள 6 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் உரிமையானது என்பதை காட்டுவதற்கு வா .சா.ஆ–1 ஆன பட்டா பாஸ்புத்தகத்தை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான் . சர்வே எண்.120/1, 120/4 மற்றும் 134–க்கான பட்டா எண்.18, 35, 41 ஆகியவற்றிற்கான

பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை . தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள 6 முதல் 8 அயிட்டம் வரையிலான சொத்துக்கள் 3 முதல் 6 பிரதிவாதிகளின் உரிமையிலும் அனுபவத்திலும் உள்ளது என்றாலும் , எனக்கும் அந்த சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தமும்இல்லை என்றாலும் எனவே தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள 6 முதல் 8 அயிட்ட சொத்துக்களை பொறுத்தவரை இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என் றால் சரியல்ல.